பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடம்

பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடம் 1965-ம் வருடம் நெடுஞ்சாலைத் துறையினரால் ரூ.29,129/-செலவில் கட்டடப்பட்டது. அதன்பின்னர் 1971-72, 1984-85, 1992-93 ஆம் ஆண்டுகளில் பழுது செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1993-ல் பலத்த மழையின் காரணமாக கட்டிடத்தின் மேல்கூரை பாதிக்கப்பட்டு ஆங்காங்கே கசிவுகள் ஏற்பட்டுச் சேதமடைந்துள்ளது. இதைச் செப்பனிட ரூ. 4,975-க்கு நிதி இசைவாணை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் 12-3-1994 அன்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். நம்முடைய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அவசர நடவடிக்கையெடுத்து பேராவூரணி கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்கும், பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்கும் பழுது பார்ப்பதற்காக தக்க நடவடிக்கையெடுத்து, தலா 5,000 ரூபாய் சாங்ஷன் செய்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் மீண்டும் தெரிவித்து, உடனடியாக அந்த வேலைகளைத் தொடங்கி, விரைவிலே அந்தக் கசிவினை அடைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி துரிதமாக நடைபெற அரசு உத்தரவிட்டுள்ளது.

5. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் முப்பத்தெட்டாவது மற்றும் முப்பத்தொன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.